390

உ

# புழல்மாரி விபத்து சிந்து.

இதில்

புழல்மழை காற்று விபத்துகளும்
மூத்தாலம்மன் கீர்த்தனையும்
மெய்ஞான கும்மியும்
அடங்கியுள்ளன.



இவை,

திருநீலகண்டபுரம் திருநீலமேக பஜனைபக்தர்
ப. கோவிந்தசாமி செட்டியார், சு. முத்துசெட்டியார்
வெள்ளியம்பலசெட்டியார் முதலியவருடைய
பொருளுதவியால்

திருவனந்தபுரத்தின்கண் இலக்கணவித்வசிரோன்மணி
ஆகிய காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ கனம்
**S. A.** தமிழ் உபாத்தியாயர் புதல்வன்
அமிர்தக்கவி நாவலன்

## S. A. ராஜாராம்

அவர்களாலியற்றப்பட்டது.

சென்னை ஸ்ரீ சுப்பிரமணிய விலாசம் பிரஸில்,
பதிப்பிக்கப்பட்டது.

(ரிஜிஸ்டர் காபிரைட்.)

இதன் விலை 1930 அணா 2.

உ

வேலுமயிலுந்துணை.

# முகவுரை.

---

## ஓர் நாடகாசிரியரின் ஒப்பந்தம்.

மகாபிரபுக்களுக்கோர் விஞ்ஞாபனம் யாதெனில் இப்பிரபஞ்சத்திலே அனேக கவிராயர்கள் கோடையிடிகளாய் அமைந்த பற்பல நூல்களியற்றி இருப்பினும் இந்நூலாசிரியராகிய அமிர்தக்கவி நாவலர் அவர்களாலெழுதப்பட்ட புழல்மாரி விபத்து சிந்தானது யான் வாசித்து பாடி என் மனமொப்பந்தமானது யாதெனில் புலவர்களுக்கவிழ்தமான சீர்-அடி-தளை-அசை-மோனை-எதுகை-எனும் நல்லமிர்த சொல்களா லமைத்துளதான இன்னூலை படிப்பவரின் மனதிற்கு அறிவுயிருடுவதோடு அதிபக்திவாய்ந்து மகிழ்ந்தேருவா ரென்பதற்கு ஐய்யமில்லை.

இன்னூலாசிரியர் கு. சாக்ஷாத் உலக மாதாவாகிய கலைவாணி அம்பிகையின் அருளால் இன்னும் கல்விப்பயன் மிகவும் சிறப்புற்றோங்கி வரும்படிக்கும் மேன்மேலும் இவரின் கவிகள் பிரசுரமாகும் படிக்கு எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ கேரள மதுரானந்தகான சபா

கெம்பீர ராஜபார்ட்டு,

**கோபாலராம்,**

திரு அனந்தநகர்,

உ

1390

# புழல்மாரி விபத்து சிந்து.

கலைவாணி காப்பு.

வெண்பா.

அன்னை கலைவாணி அருட்புரியும் பூமேனி
நன்மணியே நாயகியே நட்புடனே சென்னைதனில்
வின்னயமாய் புயல்காற்றடித்த விபத்துகளை பாடுதற்கு
என்னுவில் வந்தருள்செய்.

(இராகம்-நாத நாக்கிரியை ஆதி தாளம்.)

பல்லவி.

விபரத்தை கேளீர் வர்ணபகவான் செய்த
வினைகளைப் பாரீர்.

அனுபல்லவி.

விபத்துகள் வந்துதே வையகந்தன்னிலே
வெகுபேர் மழைக்காற்றால் வெளியி லிறங்காத (வி.)

சரணங்கள்,

விபத்து வினைகளும் வானவன் செய்ததில்
வருட மாயிரத்து தொளாயிரத்து முப்பதில்
வடுத்த நவம்பர்மாத மிருபத்து யெட்டதில்
வண்மை சனியன்று மணிமூன்றரை தன்னில்

வண்மையாய் ஐயா வாருடன் மழைகாற்று
வந்துதே மெய்யா.

பெரும் மழையும் புயல் காற்றும் வந்துதே
பெருத்த மரங்களெல்லாம் பிரண்டு விழுந்துதே
பேதையர்கள் பெரு மிரைச்சல்களு மிடுதே
பெருத்த கியாஸ்லைட் தூண்கள் பேர்பாதி சாய்ந்துதே

...ற்றலையா புலம்பி நின்றார்ஜனம்
... மெய்யா.

...கள் தெருக்களிளுருண்டுதே
... தெருவெல்லாம் புரண்டுதே

ஒ25:417
N30
149699

# புழல்மாரி விபத்து சிந்து.

தேசத்தில் பற்பல. தீவினைவந்துதே
தெய்வச்செயலால்மழை திரளாக பொழிந்துதே
திசைகெட்டு போச்சே தீவினையதிகமாய்
திகைதப்பி போச்சே.

பட்சி பறைவைபாடு பார்க்க சகியாது
பகரவெந்தனுவால் பாரினில் முடியாது
அட்டதிசை யெங்கும் மாபத்தாய் முடிந்தது
அதிகமழையால் மன மலைந்து திரிந்தது

ஐய்யோ பரிதாபம் அனியாய மனியாயம்
யாரிட்ட சாபம்

தஞ்சை திருச்சி ஜனம் தயங்கியே நின்றதாம்
தாணியிலே பல துன்பங்கள் நேர்ந்ததாம்
சிந்தை கலங்கியே சிலபேர்களழுதாராம்
தினமும் பனம்வாடி சிதரியே நின்றாராம்.

விந்தை யிதுவாச்சே வர்ணபகவான் செயல்
வேடிக்கையாச்சே

கோயம்புத்தூர் ஜில்லா கோவை நகரெல்லாம்
குச்சு வீடுகள்பல கூரைவீடு மிடிந்ததாம்
காயம்பட்டு சிலர் கைலாசம் சேர்ந்தாராம்
காற்று மழையில்பல கஷ்டங்கள் நேர்ந்ததாம்

குணம் கெட்டுப்போச்சு குடிஜனங்களின்
மனம் கெடலாச்சு

புள்ளாச்சியிலோற் புகைவண்டி விழுந்ததாம்
போத்து நூரில் வெள்ளம் புழலால் நிறைந்ததாம்
புறையார் புதுவையும் புயலால் பாழாச்சுதாம்
பொல்லா வெள்ளத்தாலே பெருஞ்சேத மாச்சுதாம்

புலம்பிகின்றாரே பேதை ஜனங்கள் மனம்
கலங்கிகின்றாரே

கடலூரிலடித்ததாம் கடுமையான காற்று
கண்ட ஜனங்களெல்லாம் கொண்டமனைகள் விட்டு
தடுமாரிபோனாராம் தயங்கியே நிலைகெட்டு
தத்தளித்தார்பலர் தியங்கிமனம் திடுக்கிட்டு

திசைதப்பி நின்றார் தாரணி தன்னிலே
தவிர்த்துமே நின்றார்.

பட்டணத்தி லிருந்து பதினெட்டு மயிலுக்கப்பால்
பகரவொண்ணுமழை பார்தனில் பெய்ததால்
திட்டமாய் தந்திகள் திடமாய் நின்றுபோனதால்
தயங்கி ஆபீசர்கள் திகைத்துமே நின்றதால்

திசைதப்பி போச்சே தந்திகளறுந்ததால்
தவித்திடலாச்சே

உன்னதமரங்கள்யாவு முருயற்று போச்சுதே
சின்ன பின்னமாகவே சிதரியே விழுந்ததே
தின்னமாயனேக வின்னங்கள் வந்ததே
தெருக்களெல்லாம் தண்ணீராலே நிறைந்ததே

தற்பரன் செயலே தரணியிலிவ்வாரு
நடந்தது புயலே

வில்லிவாக்கம் வண்ணார்பேட்டை கத்திவாக்கம்
வாகான திருஒற்றியூரும் நந்திபாக்கம்
வரையிலும் வெள்ளத்தின் வருகை பெருநோக்கம்
வையகத்தோர் கண்டு வைத்தார் மனமேக்கம்.

வழிகிடையாது ஜனங்கள் நடப்பதற்கு
மிடங்கிடையாது,

மயிலாப்பூர் சமுத்திர கரையோரமிரண்டுபேர்
மழையும் புயலில் நனைந்தவர் சென்றனர்
மதியாலே நொச்சி குப்பந்தனி லடுத்தனர்
மழைகாற்றுமோதியே மூர்ச்சையாய் விழுந்தனர்

மழை புழல் காற்றால் நடுகுப்பத்தி லோர்வீடு
விழுந்துதே நேற்று

மந்தவளியடையார் பாப்பாஞ்சாவடி
மட்ராஸ் பஸ்கள்தங்கும் பலகை வாராவதி
மரங்களெல்லாம் விழுந்து மாண்டுதையோ ததி
மாண்புவி தனில்வந்த மழைகாற்றாலிக்கதி

மடிந்தா ரனேகர் மழைபொழிந் ததினுலே
மாண்டாரனேகர்

பாலவாக்கம் போர்டுஸ்கூல் பதறியே விழுந்ததே
பக்கம் நீலாங்கரையில் பெருங்காற்று மடித்ததே
பச்சை சவுக்கை மரங்கள் பாழாக போனதே
பாதையெல்லாம் தண்ணீர் பரிவாக மூழ்ந்ததே

பரிதாபம்ஐயே பாரினிலிக்கதி
நேர்ந்ததே மெய்யே

---

(இராகம் சுருளிமலை மீதுமேவும் என்ற வர்ணமெட்டு)

சமுத்திரத்தின் கொத்தளிப்பு தானே அதை
செப்புகிறேன் கவிபா லிப்போ நானே நல்ல

சரசமுள்ள நாகை முதல்
காக்கினுடாவரையில் கடல்
தத்தளிப்பு மிக மப்பு,

சென்னையின் றுரைமுகத்தில் ஐய்யா புழல்
சேர்ந்தலை யடித்ததினுல் மெய்யா அந்த

சேதி தெரிவிக்கும்படி
கோதிலா வதிகாரிகள்
சாற்றி கொடி மாட்டி

கலிகால கொடுமையினுல் தானே மிகக
கஷ்டம் புவியோர்க்குண்டாச்சு தேனே இந்த

காலமலங் கோலமதின்
சேதிதனை தாலமதி
லுரைப்பேனே இப்போ நானே

பேதைகள் பிழைக்கும் வழி தேடி எங்கும்
போகவில்லையே ஜனங்கள் கோடி அந்த

பாதைய னுகாமலிருக்க
பாதுகார்க்கும் கவர்மெண்டாரின்
கீர்த்தி வெகு நேர்த்தி

சிங்காரவன மொன...
அங்காரகன் வாழ்ந்திரு...
தங்கமயமாய் இருக்கும் சிம்...
தனுக்கைப்பாரடி ஞான பெண்ணே...

ஏழு சமுத்திரத்திர்க் கப்பாலவன்
எட்டியபாழுங் கிணற்றறுகே
ஆளுகிரானதில் அன்புடனரசு
ஆதியாகவல்லோ ஞான பெண்ணே

கண்டத்திற்கு மேலே குண்டுமலை அதை
வென்று விட்டால் நல்ல பண்டமாச்சு
தண்டாயுதத்துடன் ஐவர் வருவார்கள்
கண்டறியவேணும் ஞானபெண்ணே 19

பாற்கடல் செல்லவும் பாதையாச்சு அங்கே
நாற்கட லுண்டு நளினமதாய்
ஓற்கடலதை தாண்டினு லல்லவோ
நற்கடல் தாண்டலாம் ஞான பெண்ணே 20

சிவன் ப்ரம்மா விஷ்ணு மூவராச்சு அந்த
சிவலிங்கத்திர்க்குள்ளே ஆதியாச்சு
இவனே அவனே எவனே யதிலே
ஏகப் பொருளுண்டு ஞான பெண்ணே 21

ஐந்து பஞ்சபூத யாளுமோற் கோட்டையில்
ஐம்பத்தோ ராசர் தானிருக்க
அஞ்சாம லவரை தஞ்ச மென்றவற்கு
சொந்தங்க ளேதுக்கு ஞான பெண்ணே 22

மூலப்பதியை யறிந்தாலல்லவோ
முச்சந்திவீதி யறியலாகும்.
வாலவயதை யறிந்துக்கொண்டால் நல்ல
காலம் தவராது ஞான பெண்ணே 23

சூக்ஷவழியாது மோக்ஷமடையவே
சொன்னேன் சொன்னேன் புவிதானரிய
சாக்ஷியாகும் நாளை ராஜாராம் சொல்லிது
சத்தியம் சத்தியம் ஞான பெண்ணே. 24

---

## விருத்தம்.

**ரா**வல்ல பகலில்லை இரவுபகலொன்றில்லை இனியுமுண்டு
**ஜா**ணல்ல எண்ஜாணில்லை என்னுடம்பு ஏகி வளருமிப்புவியில்
**ரா**மல்ல சிவனில்லை ராகவதாரமில்லை யானில்லாமல்
**ம்**அல்ல உம் அல்லஇம் உம் எதுவுமல்ல இனியேது தானே.

ஸமப்தம்.

---

எஸ்பிளனெட் ரோட்டிலோர் வீடு அது
இடிந்து விழுந்ததினுலே கேடு வந்ததை
எடுத்துரைக்கின்றே னதை
கொடுந்துயர மானதை
நேரே புவி யோரே

இடிந்து விழுந்தது வீடு கீழே அதில்
இருக்கும் புஸ்தகங்கள் பாழே ஐயோ
இன்னம் பற்பல சாமானங்கள்
திண்ணமாக மண்ணுக்குள்ளே
யாச்சே கெட்டு போச்சே.

---

(அனியாயம் அனியாயம் என்ற வர்ண மெட்டு)

பல்லவி.

பரிதாபம் பரிதாபம் பாரில்
புயல் மழையால் வந்த (பரிதாபம்)

அனு, சரணங்கள்.

புழல்காற்று மப்பு மழை புவியில் பொழிந்ததாலே
சுழண்டு மரங்களெல்லாம் புரண்டு விழுந்து பெரும்
வெள்ளத்தி னேட்டம் மனம்
கலங்குதே வாட்டம் அதை
பார்த்து பயந்து சிலர் மன
வேர்த்து கலங்கினரே (பரிதாபம்)

பஞ்சமியர் குடிசை எல்லாம் பஞ்சாய்பறந்து போச்சு
பார்மீது பிழைப்புயற்று பாதவிக்கும் ஜன மதிகமாச்சு
இதுவலங்கோல மாச்சு
நதிவழி கெட்டு போச்சு நல்ல

பாதைஎல்லாம் பாழ்மழைபால்
பள்ளமேடு மிகவுமாச்சு (பரிதாபம்)

செங்கற்பட்டு ஜில்லாவை சேர்ந்த பாங்கிமலேவரையும்
தங்கமுடிய வொண்ணு தண்ணீராலே வந்ததுன்பம்.

சாற்றுவேன் ஐய்யா நேற்று
நடந்தது மெய்யா இதை

கேட்டு மனம் பிரண்டு
வாட்டமாயெழுதி விட்டேன் (பரி)

---

## கு ம் மி.

சமுத்திரவோரத்தி லெஸ்எஸ் ஜாவாஆரா
எண்ணுமோர்கப்பலுக்குள்ளே ஐய்யா
சமுதாயமாகவே பெட்ரோலிறக்கும்
சமயத்தில்நேர்ந்ததை கூருகிறேன். 1

புயல்மழைகாற்று பெருக்கவுண்டாவதால்
பெட்ரோலிறக்க வேண்டாமெனவே
பூர்த்தியாக அதிகாரிகள் செப்பிடும்
வார்த்தைதனைகேட்டு நின்றனவாம் 2

வர்ணபகவான்செயலாலே அப்போ
வந்துதய்யோகேடு கப்பலுக்கு
தருணமீதென்று நங்கூரம்பொடி
தூளாயொடிந்ததாம் கப்பிசளும் 3

நங்கூரம்கம்பி வொடிந்தருபடவே
நாட்டியமாடுதாம் கப்பலங்கே
துங்கமாயடுத்த கரைசுவர்மோதவே
தூளாச்சுதாம்கம்பியும் சொட்டைகளும் 4

ஆபத்துண்டாகுமென பயந்தவுடன்
அதிகாரிகப்ப லப்புறப்படுத்த

## புழல்மாரி விபத்து சிந்து.

ஏகமதாகவே ஏற்றமுயற்சிகள்
எடுத்தும்கப்ப லதிணங்கவில்லை

பாபம்பரிதாபம் கப்பலின்கம்பிகள்
பாழாகபோனதா லசையவில்லையென
பார்த்துபயந்து மயங்கியேநின்றவர்
பற்பலயோசனை செய்தனராம் 6

இன்றிரவுத்தேசம் மூன்றரைமணிக்குள்
இரையாகும்கப்பல் கடலுக்குள்ளே
என்றெண்ணியந்த கப்பலைகாப்பாற்ற
அன்றியிருந்த ரனேகபேராம் 7

கப்பலடுத்துஇருந்த சிலபேர்க்கு
கனத்தகாற்றால் காயம்பட்டதினால்
அப்போதாஸ்பத்திரிக் கெடுத்துசென்றார்
அதிலும்நாலுபேர் கபோதிகளாம் 8

---

## வளையற் சிந்து.

இன்னும்சிலசெய்திகளை
எடுத்துரைப்பேன் நானே
இந்த-நானிலத்தில் தானே
மழைபா லின்னபின்னமானதையான்
பாட்டாய் பாடுவேனே 1

புழல்காற்றால் கப்பலும்புகை
வண்டிகளும் போச்சு
பிழைப்பது மரிதாச்சு
ஏழைகளின் பேச்சு
பேதையர் மனம்பிரண்டு
பிதற்றலு மிகவாச்சு 3

தெருக்களெல்லாம் வெள்ளத்தாலே
தயங்கி நிற்கின்றாரே

சீரழிந்து நிற்கின்றாரே
சிவசிவா என்கின்றாரே
எமை சீக்கிரமாய் வந்துகாரும்
சிவபெருமானே என்றாரே 4

## நொண்டிச் சிந்து.

அதிசயமலங்கோலம் இப்போ
அதிகப்புழல்மழை பெய்ததினால்
சதிவந்து நேர்ந்துதைய்யா சென்னை
சூளையில் நடந்த விபத்துரைப்பேனய்யா (அதி)

விஜய விநாயகர்கோவில் அருகில்
வெகுவாய்வளர்ந்ததோ ராலமரமாம்
விழுந்துதாம் குடிசைதன்னில் அங்கு
விட்டிருந்தமாடிரண்டு மடிந்தனவாம் (அதி)

பின்னுமிரண்டுமாடுகள் விழுந்து
வின்னமாயிழுத்து கொண்டிருந்தனவாம்
சென்னையில் புழல்காற்றால் மிக
சேனைமரமொடிந்து விழுந்தனவாம் (அதி)

பொன்னேரி நெல்லூரு போகும்
புகைவண்டிகளன்று போகவில்லையாம்
இன்னும்சில விடங்களுக்கு டிராம் பஸ்
செல்லமுடியவில்லை அல்லலாலைய்யா (அதி)

பிராட்வேரோட்டிலிருக்கும் லைட்டு கம்பி
பெருத்தகாற்றாலே மின்சாரமறுந்து
கறண்றுடனேர் சிருவன்மீது பட்டு
காயமடைந்து இருக்கின்றானும் ஐய்யா (அதி)

டிராம்வே முழுதும்நின்று எங்கும்
செல்லவில்லையே யிந்த தொல்லையினாலே
இரும்பின் கம்பிகளும் ரோட்டில்
இன்னபின்னமாகவே கிடந்துதைய்யா (அதி)

ஆரிஸ்பாலத்திற் கருகில் ஐயோ
ஆண்பெண் கிழமிரண்டு செல்லும்போது
நேர்புயல் வந்துமோதி சுவர்தாக்கி
நேர்கதியாகவே மடிந்தாரையோ (அதி)

அமிர்தக்கவிராஜாராமன் இதை
அன்புடனேதமிழ் நாடுபேப்பரைகண்டு
தமியன்கவியாக எழுதி சகலோரும்
தெரிந்து பாடும்படி அச்சிலிட்டேன் (அதி)

---

## திரு நீலகண்டபுரம்

## முத்தாலம்மன்மீது ஸ்துதிவணக்க கீர்த்தனை.

(இராகம் தசரதராஜகுமாரா என்ற வர்ணமெட்டு)

சுத்தநிற்குண ரூப சவுந்தரியே
சுகிர்த சுந்தரியே
முத்து மாரியே
பதம் பணிந்தேன்

எத்திசைக்கதிபதி ஏகாட்சர சுந்தரி
ஏகபரமேஸ்பரீ இலங்குந் தயாபரி
ஏழைகள் மீதுவாது ஏனோ பராபரி
ஏனின்னம் எந்தன்மேல் வாது
ததி வோது
மிக சூது
இது தகாது

திருநீலகண்டபுரத்தில் திலகம்போலமர்ந்தாய்
திகைக்கும் பாலர்கள்மீது திருவருள்புரிந்தாய்
திரிலோகவாரணியே திருவாசீர்சொரிந்தாய்
சேயர்பணியும் கெம்பீரி
அலங் காரி
முத்து மாரி
தயா பரியே

பத்தினிவுத்தமியே பார்புகழ் விண்மணியே
பகர்வினைபோகவே பாதுகார் கண்மணியே
இத்தலத்தினிடரை யகற்றுவாய் மாமணியே

பக்தன் ராஜாராம் சீடன் நானே
சாமிகண் தானே
ஏழை யானே
கவி பாடினேனே

---



## அறுவுருவானந்த மெய்ஞான கும்மி.

### விநாயகர் காப்பு

### வெண்பா.

தித்திக்குந்தேனே தெவிட்டாத தெள்ளமுதே
முத்திக்குவித்தாய் மூளைத்தவ்னே-இத்தரையில்
பக்தியுடன் மெய்ஞான கும்மியதை பாடுதற்கு
அத்திமுகத்தோ னருள்செய்.

---

### கு ம் மி.

ஆதியானதும் வோர்ஜோதி அதில்
அன்பேவுரு கொண்டநீதி
ஆதிமுதலெழுத்தை யறிபவே
ஆராய்ந்துபாடி ஞானபெண்ணே. 1

ஞானபொருள்களை நாடவேணும் நல்ல
ஞாயமானவழி தேடவேணும்
வானவனின்பதங் கண்டுகொண்டாலல்லோ
வைகுந்தம்சேரலாம் ஞானபெண்ணே. 2

எண்ஜாண்நிறைந்தது வோர்கூடு அது
ஒன்பதுவாச லுள்ளவீடு
அஞ்சாமல்ஐவர் வாழும்நாடு அதை
அறிந்துபாரடி ஞானபெண்ணே 3

ஐவர்கள்காவலர் அந்திரமாகவே
ஆங்காங்குகாவல் புரிந்திருக்க
ஆட்டகுதிரையின் மீதினிலோர்துரை
ஓட்டமாய்ஓடுவார் ஞானபெண்ணே 4

ஓடுங்குதிரை நிருத்தவேணும் அப்பால்
ஒன்பதுவாசல்கள் தாண்டவேணும்
சாடுங்குரங்கை துரத்தவேணும் மிக
சாத்திரமாகவே ஞானப்பெண்ணே 5

சாத்திரமாகவே சேரவேணுமிக்க
ஆத்திரமில்லாமல் போகவேணும்
சூத்திரப்பாவையின் நூலற்றுபோகாமல்
பாத்திரமாய்பாரு ஞானப்பெண்ணே 6

கார்க்கயிலங்கு பொல்லாவிலங்கினர்
காடிபுலிசிங்க மோடிவரும்
ஆர்க்குந்தெரியாம லஞ்செழுத்தாலதை
அகற்றிடவேணுமே ஞானப்பெண்ணே 7

ஆதிமுதலி லம்பத்தோரட்சரம்
அன்புடனதை தெறிந்தவற்கு
சோதிவொளியை தானேயறிவார்கள்
சேதியைகேளடி ஞானப்பெண்ணே 8

நாசிமுதலடி வாசியாச்சு அதை
பூரசப்படுத்தினல் வாசமாச்சு

வாசியாம் வாலையின் கைபிடித்தாலெங்கும்
கூசாமல் போகலாம் ஞானப் பெண்ணே

முன்சுழிமுனையறியவேண்டும் பின்பு
பின்சுழிமுனையை பார்க்கவேண்டும்
கண்காண நாவுக்கு கீழிலிருக்குது
நல்லவழியடி ஞான பெண்ணே 10

நாவிக்குக் கீழ் உள்ள நல்வழிகண்டாலோ
நல்லபாம்பு படமாடி நிற்கும்
நாடியே சீறிகொண்டோடி வருமுன்னே
நவின்று நில்லடி ஞானப்பெண்ணே 11

ஆறுகால் பந்தலில் ஆசானிருக்கிறான்
ஆறுலெக்ஷ சீடரோடுகூடி
தாருமாறுகவே செய்குவான் சாத்திரம்
செப்புகிறேன்கேளு ஞானபெண்ணே 12

ஆருகுளத்திற்கருகே அவனொரு
ஆழமான ஆற்றிற்குள்ளே நின்று
தாருமாறாகவே வந்தவரை ஓட்டி
தானாக நிற்குன்றான் ஞானபெண்ணே 13

கோட்டையிலிருக்கும் ஓர் நாடு அங்கு
கும்பகர்ணன் குள்ளமனையக்காரன்
எட்டை பெழுதும் கணக்குப்பிள்ளையோடு
எஜமானிருக்கிறான் ஞான பெண்ணே 14

திருடர்களை வோட்டும் சேவகனோடு
சிறப்புற்ற மாஜிஸ்டிரேட்டு கலக்டர் முதல்
சிறிதும் அஞ்சாகுலை செய்பவே செப்பிடும்
ஜட்ஜிதுரையுண்டு ஞான பெண்ணே 15

ராஜனிருக்கிற கோட்டையை சுற்றியே
நாற்பதுனாயிரம் சேனையுண்டு
ரோஜாச்செடியிலிருக்கும் மலரைப்போல்
ராஜனிருக்கிறான் ஞான பெண்ணே 16